**போப்பே – போத்தல பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

-----------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2016 யூலை 27 ஆந் திகதியன்று நகர சபைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

**1.2 முனைப்பழியான அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான போப்பே - போத்தல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) திரும்பிப் பெறப்பட்ட 06 செலவினக் கணக்குகளது கூட்டுத்தொகையான ரூபா 1,321,259 அக் கணக்குகளில் செலவு வைக்கப்படாது திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கெனப் பெறவேண்டிய முத்திரைக் கட்டணமாகிய ரூபா 203,400 மற்றும் திறைசேரி உண்டியல் மீதான வட்டியாகிய ரூபா 42,651 என்பன நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 404,180 க்கான நிலையான சொத்துக்களும் நூலகப் புத்தகங்களது கொள்வனவின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 70,946 தரகும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் நன்கொடையாகப் பெறப்பட்ட நீர் பவுசரது பெறுமதியும் ஊழியர் பிணை முதலீடான ரூபா 97,875 தொகையும் அதற்குரிய ரூபா 2,263 வட்டியும் கணக்கிலிடப்படவில்லை.

(உ) மீளாய்வாண்டினது 06 கடன்கொடுத்தோர் மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 347,143 அதிகரித்தும் வேறு 04 கடன்கொடுத்தோர் மீதிகளது கூட்டுத்தொகையான ரூபா 71,365 குறைத்தும் நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின்போது முடிவடைந்த 06 வேலைகளுக்குக் கொடுப்பனவு செய்யவேண்டிய ரூபா 1,630,964 கூட்டுத் தொகையுடைய மூலதன உதவி மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கு வழங்க வேண்டிய ரூபா 500,000 என்பன கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட ரூபா 52,164,158 கூட்டுத்தொகையுடைய 8 கணக்கீடு விடயங்களது மீதிக்கும் அவற்றுடன் ஒத்த உப பதிவேடுகளிலும் அறிக்கைகளிலும் காணப்படும் மீதிக்குமிடையே ரூபா 3,849,047 வேறுபாடு நிலவியது.

### 1.3.3 தொங்கற் கணக்கு

தொங்கற் கணக்கின் ரூபா 761,993 செலவு மீதியை இனங்கண்டு தொகையான சீராக்கலைச் செய்து கணக்கைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் ரூபா 511,577 நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணமாகிய ரூபா 51,325,338 மற்றும் ரூபா 858,816 கூட்டுத்தொகையுடைய வீதி விளக்கு உதவித் தொகை நிலுவை என்பவற்றிற்கு மீளளிப்பைப் பெறுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் ரூபா 22,966 கூட்டுத்தொகையுடைய 04 பெறவேண்டிய கணக்குமீதி, முற்பணக் கணக்கு மீதியாகிய ரூபா 470,962 மற்றும் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான ரூபா 44,504,800 கூட்டுத்தொகையுடைய கடன்பட்டோர் மீதி என்பன நிலவியபோதும் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான அரசாங்க உதவு தொகைக் கணக்கின் கூட்டுத்தொகையான ரூபா 22,250,626 மற்றும் ஏனைய கடன்பட்டோர் கணக்கு மீதியாகிய ரூபா 4,257,062 என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 52,008,359 கூட்டுத் தொகையுடைய காணிகளதும் கட்டிடங்களதும் உரித்துறுதி மற்றும் உரித்தை உறுதி செய்யும் ஆவணங்களும், ரூபா 63,310,649 கூட்டுத்தொகையுடைய நிலையான சொத்துக்களுக்கான நாளதுவரையாக்கப்பட்டு சொத்துக்களது வகுப்பிற்கேற்பத் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பட்டோலைகளும், ரூபா 137,275,766 கூட்டுத்தொகையுடைய கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளைக் குறிக்கும் பதிவேடுகளும் காலப்பகுப்பாய்வும் மீதிகளது உறுதிப்படுத்தலும் மற்றும் ரூபா 3,048,654 பெறுமதியான 09 நிலையான வைப்புச் சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்படாததால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகப் பரிசீலிக்க முடியவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 29,119,540 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 9,437,038 ஆகும். இதற்கமைய, மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 19,682,502 அதிகரிப்பைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபை ஆட்சேர்த்த ஊழியர்களது சம்பளத்தையும் படிகளையும் வழங்குவதற்குச் சபையின் வருமானத்தில் ரூபா 11,890,057 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு முன்னைய 2 ஆண்டுகளின்போது சுய உற்பத்தி வருவாயிலும் கூடுதலாக மீண்டுவருஞ் செலவினம் அதிகரித்ததால் சபைக்கு வருவாய்க்கான உதவி கிடைக்காது போனால் சபையினது வருமானத்தின் மூலம் மீண்டுவருஞ் செலவினத்தை ஈடுசெய்ய முடியாதுபோகும்.

(இ) வருவாயை அதிகரிப்பதற்குச் சபை கவனஞ் செலுத்தாதுவிடின், நிதி நிலைமையின் சாதகமற்ற தாக்கமத்தால் சபை தொடர்ந்திருப்பது சர்ச்சைக்குரியதாகி விடும் என்பது கணக்காய்வு அபிப்பிராயமாகும்.

(ஈ) மீளாய்வாண்டினது உள்ளவாறான மூலதன வருவாய்விலும் கூடுதலாக ரூபா 21,881,828 மூலதனச் செலவினம் ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் வரவு, செலவுத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட மூலதன வருவாயிலும் கூடுதலாக ரூபா 24,550,000 மூலதனச் செலவினத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்டபோதும் அதற்காக நிதியைப் பெறும் விதம் விளக்கப்படவில்லை.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயல்முன்னேற்றம்

தீர்வையும் வரியும், குத்தகை வாடகை மற்றும் வர்த்தக அனுமதிப் பத்திரங்களின் மூலம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலவிய ரூபா 27,778,661 கூட்டுத் தொகையுடைய வருவாய் நிலுவையில் ரூபா 7,088,308 அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, வருவாய் நிலுவையை அறவிடுவதற்கான செயல்முன்னேற்றம் ஏறக்குறைய 26 சதவீதமாக இருந்தது.

#### 2.3.2 தீர்வையும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஆண்டின் ஆரம்பத்திலான நிலுவைத் தொகை ரூபா 25,423,626 ஆகும். ஆண்டின் இறுதியில் அது மேலும் 2,564,322 அதிகரித்திருந்தது. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நிலுவையாக உள்ள தீர்வையையும் வரியையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) அபிவிருத்திக்குள்ளான சொத்துக்களைக் கணிப்பிட்டு திர்வையையும் வரியையும் பெறக்கூடிய பிரதேசத்தை விரிவடையச் செய்து வருவாயை உயர்த்துவதற்கு முறையான வேலைத்திட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## 2.3.3 குத்தகை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை ரூபா 2,148,227 ஆகும். இதனை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) அறவிடப்பட வேண்யிருந்த 59 கடைகளது குத்தகை வாடகையும் தண்டப் பணமும் முறையே ரூபா 306,434 மற்றும் ரூபா 51,059 என்பனவாகும்.

## 2.3.4 அனுமதிப் பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் அறவிடப்படவேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணம் ரூபா 128,748 ஆகும். இதனை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 152(4) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்ககை மேற்கொள்ளப்படவில்லை.

## 2.3.5 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 51,325,338 மற்றும் நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 511,577 என்பன பெறப்பட வேண்டியிருந்தது.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் ரூபா 20,339 கூட்டுத்தொகையுடைய கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைகளைத் தீர்த்துவைப்பதற்கு மீளாய்வாண்டின்போதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு முடிவிலிருந்து 29 மேலதிக பதவிகளை முறைப்படுத்துவதற்குச் சபை கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

(இ) சபையில் பணியாற்றி இடமாற்றம் பெற்ற, ஓய்வுபெற்ற, மரணமடைந்த 38 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 805,348 ஆகும். மீளாய்வாண்டிலும் இதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,153,371 கூட்டுத்தொகையை வங்கியிலிடாது கையிலுள்ள காசாக சபையில் இருந்தது. தலைமை மற்றும் உப அலுவலகங்களில் நாளாந்தம் பெறப்படும் பணம் நிதிப் பிரமாணம் 177(1) க்கமையவும் நாளாந்தத் தொகையை வங்கியிலிடல் தொடர்பான நிதிப் பிரமாணம் 177(3) க்கு அமைவான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,200,000 கூட்டுத்தொகையை விரைவாகக் காசாகப் பெறுவதற்கு இயலும் விதத்தில் ''ஏழுநாள் வைப்புகளில்'' முதலீடு செய்ததால் சபை சம்பாதிக்கக் கூடியதாக இருந்த அதிகூடிய முதலீட்டு வட்டி கிடைக்காது போனது.

**3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

2013 செப்டம்பர் 09 ஆந் திகதிய குழுத் தீர்மானத்தின் படி அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் பிரித்தொதுக்கப்படாது ரஜ்கம பிரதேச சபையின் மொன்டோரியாவத்தையில் உள்ள கழிவுப் பொருள் மீள் சுழற்சி நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு ரூபா 100,000 வீதம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்தது.

**4. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

**4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடங்கிய செலவின விடயம் ஒன்றினது மொத்த நிதியேற்பாடான ரூபா 500,000 வேறு 06 செலவின விடயங்களது கூட்டுத்தொகையான ரூபா 21,843,603 சேமிப்பும், 03 செலவின விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட வரம்பிலும் கூடுதலாக ரூபா 72,619,991 கூட்டுத்தொாகயுடைய செலவினமும் 06 வருவாய் விடயங்களில் எய்தப் பெறாத ரூபா 18,662,907 வருவாயும் நிலவியதால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமை புலனாகியது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளூராட்சி ஆணையாளரது (தென் மாகாணம்) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/ந.வ.லே சுற்றறிக்கைப் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும், சபை நியமித்திருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின்போது சம்பளமும் படியுமாக ரூபா 568,144 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை நிறுவுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்து முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

சபை வளாகத்தில் துருப்பிடித்தவாறிருக்கும் 3 வாகனங்கள் 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் காணப்படும் ஏற்பாடுகளுக்கமைய கைதவிர்ப்புச் செய்யப்படுவதற்கோ அல்லது பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் பயன்படுத்தப்படுவதற்கோ 2016 ஏப்ரல் 29 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

சபை பயன்படுத்தும் 05 வாகனங்களது உரித்தை சபை சுவீகரிப்பதற்கு 2016 ஏப்ரல் 29 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கீழே காணப்படும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) வாகனக் கட்டுப்பாடு
(ஊ) மனிதவள முகாமைத்துவம்